27.03.2026

OS. No.**62/2019**

**வா.சா.1 –** திரு.செந்தீபன் த/பெ. ஒண்டிமுத்து

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :–**

எனக்கு இந்த வழக்கில் முதல் பிரதிவாதியைத்தான் நன்கு தெரியும். இரண்டாம் பிரதிவாதியுடன் அதிகமான பழக்க வழக்கம் கிடையாது என்றால் சரிதான். பாரத் டிஜிட்டல் விஷன் என்ற நிறுவனத்தில் 2014ல் பிரச்சனை ஏற்பட்டது. 2014 ஆம் வருடம் தான் அந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது என்றும், 2016 ஆம் வருடம் ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் பிரச்சனை ஏற்பட்டது என்றும், சொன்னால் சரியல்ல. அந்த பிரச்சனை ஏற்பட்ட காலத்தில் நான் தில்லை நகர் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது அந்த புகார் மனுவின் நகல் ஆகும். அது பி.வா.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காட்டப்படுவது அந்த புகார் மனுவிற்கு காவல் நிலையத்தில் இருந்து வழங்கப்பட்ட புகார் மனு ரசீது நகல் ஆகும். அது பி.வா.சா.ஆ.2 ஆகும். அந்த புகார் மனுவானது 26.10.2016 ம் தேதியன்று பாரத் டிஜிட்டல் விஷன் நிறுவனத்தின் மூன்று பங்குதாரர்கள் மீது கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு நான்தான் விவரம் சொன்னேன். 2016ம் வருடத்தில் இருந்து சூர்யா பைனான்ஸ் நிறுவனத்திடமிருந்து வாங்கியதாக சொல்லப்படும் கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டி தொகையை பிரதிவாதிகள் செலுத்தாத பட்சத்தில் நானும் சூர்யா பைனான்ஸ் நிறுவனத்தினரும் பலமுறை கேட்டதாக கூறியது எப்போது எவ்வாறு என்றால் போனிலும் நேரடியாகவும் தான் கேட்டோம். 1,2 பிரதிவாதிகளின் செல்போன் எண்கள் எனக்கு தெரியுமா என்றால் முதல் பிரதிவாதியின் செல்போன் எண் தெரியும். நான் மேடோவர் பெறுவதற்கு முன்பாக பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் நேரில் தான் சொன்னேன். எனக்கு இந்த வழக்கில் இரண்டாம் பிரதிவாதியை யார் என்று தெரியாது என்றும், முதல் பிரதிவாதி என்னுடைய பங்குதாரர் கோடி என்பவரின் முந்தைய பங்குதாரர் என்றும்,

அவர்களுக்குள் ஏற்பட்ட வியாபார சிக்கலில் தான் இந்த வழக்கில் கண்ட பிராமிசரி நோட்டை தயாரித்து வழக்கு தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேடோவர் வாங்கிய தேதி 05.01.2018 ஆகும். நான் வழக்கறிஞர் மூலம் 02.03.2018 ல் அறிவிப்பு அனுப்பினேன். அந்த அறிவிப்பை பெற்றுக் கொண்ட பிரதிவாதிகள் தொகையை செலுத்துவதாக கூறியதாக வழக்கில் குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால் முதல் பிரதிவாதி தான் செட்டில் செய்வதாக கூறினார். அவ்வாறு எப்போது எங்கு வைத்து கூறினார் என்றால் முதல் பிரதிவாதியின் அலுவலகத்தில் வைத்து கூறினார். நான் முதல் பிரதிவாதிகள் அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் அடிக்கடி அங்கு செல்வேன். நான் தாக்கல் செய்த வழக்கில் ஆர்பிட்ரேசன் நடவடிக்கை சமரசத்தின் மூலம் முடியப்போவதாக எனக்கு யார் சொன்னார் என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த வழக்கில் குறிப்பிட்டுள்ள சங்கதியை மாற்றி மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆர்பிட்ரேசன் நடவடிக்கைக்கும் இந்த வழக்கில் கண்ட சங்கதிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் முதல் பிரதிவாதி தான் கொடுத்தார். முதல் பிரதிவாதி தான் கொடுத்தார் என்ற விவரத்தை வழக்குரையிலும் முதல் விசாரணை பிரமாணம் வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் கண்ட சொத்தைப் பொறுத்து ஒரு வழக்கு நடைபெற்றது என்றும், அந்த வழக்கறிஞரிடம் நான் உதவியாளராக வேலை பார்த்த காரணத்தினால் தவறாக பயன்படுத்தி இருக்கிறேன் என்றால் சரி அல்ல. செந்தில்குமாரை என் தரப்பில் சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் விசாரிக்கிறேன். அவர் என்ன தொழில் செய்கிறார் என்றால் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். ஊர் தலைவராகவும் இருக்கிறார். அவர் எனக்கு நண்பர் ஆவார். நான் மேடோவர் ஆவணம் எழுதி வாங்கிய காலத்திலேயே சூர்யா பைனான்ஸ் நிறுவனத்திற்கு வட்டி மற்றும் அசல் தொகை செலுத்தி விட்டேன். அந்த காலகட்டத்தில் என்னிடமும் எனது நண்பர் ஆகிய முதல் வாதிவசமும் போதிய பணம் இருந்தது என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி தொகையை நான் வங்கி மூலம் பரிவர்த்தனை செய்தேனா என்றால் ரொக்கமாக நேரில் சென்று கொடுத்தேன். நான் 20 வருட

காலமாக தொழில் செய்து வருகிறேன். ரூபாய் இருபது ஆயிரத்திற்கு அதிகமான தொகையை பரிவர்த்தனை செய்தால் அதை வங்கிப் பரிவர்த்தனை மூலம் தான் செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். 26.10.2016ல் பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 அடிப்படையில் காவல்துறையில் புகார் அளிக்கப்பட்ட நிலையில் பிரதிவாதிகளுக்காக அவர்களின் தொழிலுக்கு கடன் வாங்கி கொடுத்ததாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிகளுக்கும் எந்தவித தொழில் ரீதியான தொடர்பு கிடையாது என்றும், அவர்களுக்கும் எனக்கும் எந்த விதத்திலும் தொடர்பு கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2ல் கண்ட கையொப்பங்கள் பிரதிவாதிகளின் கையொப்பங்கள் கிடையாது என்றும், அவர்கள் இருவரும் சேர்ந்து எந்த ஆவணங்களிலும் கையொப்பம் செய்தது கிடையாது என்றும், பாரத் டிஜிட்டல் விஷன் நிறுவனத்திற்காக மட்டுமே இருவரும் சேர்ந்து கூட்டுப் பங்கு நிறுவனம் தொடர்புடைய ஆவணங்களில் கையொப்பம் செய்திருக்கிறார்கள் என்றும், எனவே நான் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கதில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த கடன் உறுதி சீட்டின் அடிப்படையில் பிரதிவாதிகள் ஒரு ரூபாய் பணம் கூட பெற்றுக் கொள்ளவில்லை என்றும், காழ்ப்புணர்ச்சி காரணமாக வழக்கை தாக்கல் செய்து இருக்கிறேன் என்றும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல .

**<u>மறுவிசாரணை:—</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.